**சுருக்கம்**

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம் – மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – நலவாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்டமேற்படிப்பு மற்றும் இதர பட்டமேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் மேலும் 2000 ரூபாய் கூடுதலாக உயர்த்தி வழங்குதல் – அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 103** **நாள்: 25.03.2013**

நந்தன–பங்குனி 12,
திருவள்ளுவராண்டு 2044.

படிக்கப்பட்டது:–

தொழிலாளர் ஆணையரின் கடித எண்.W1/20987/2012, நாள் 25.06.2012.

-----

**ஆணை:**

11.05.2012 அன்று நடைபெற்ற 2012–2013 ஆம் நிதியாண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

> "நலவாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்டமேற்படிப்பு மற்றும் இதர பட்டமேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் மேலும் 2000 ரூபாய் கூடுதலாக உயர்த்தி வழங்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கூறப்பட்ட அறிவிப்பிற்கிணங்க கல்வி உதவித் தொகையினை கூடுதலாக ரூ.2000/– உயர்த்தி வழங்க ஏதுவாக உரிய கருத்துருவினை தொழிலாளர் ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்

3. கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை ஏற்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற

த.பி.பா.

தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி பயில்வதற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை கூடுதலாக ரூ.2000/– உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் இதர பட்ட மேற்படிப்புகளுக்கு தற்போது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2000/– வழங்க அவ்வாரியங்களுக்கு அனுமதி அளித்தும், இதனால் ஆண்டொன்றுக்கு கூடுதலாக ஏற்படும் உத்தேச செலவினமான ரூ.13,45,26,000/–ஐ (ரூபாய் பதிமூன்று கோடியே நாற்பத்தைந்து லட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்) தொடரும் செலவினமாக பின்வருமாறு மேற்கொள்ள அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது:–

| வாரியம் | கூடுதல் செலவினம் (ஆண்டொன் றுக்கு) (தோராயமாக) ரூ. | நிதி ஆதாரம் |
|---|---|---|
| தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | 3,12,60,000/– | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல நிதி |
| தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் நல வாரியம் | 2,19,84,000/– | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல நிதி |
| தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 13 நல வாரியங்கள் | 8,12,82,000/– | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 13 நல வாரியங்களுக்கு அரசு வழங்கும் மானியம் |

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.533/Secy(Exp)/12, நாள் 06.11.2012–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மோகன் பியாரெ,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**
தொழிலாளர் ஆணையர், சென்னை–600006.
தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600034.
தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம், சென்னை–600102.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம், சென்னை–600102.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600009.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600005.
மாநிலக் கணக்காயர், சென்னை–600018.
மாநிலக் கணக்காயர், சென்னை–600009.

**நகல்**

நிதித்துறை, சென்னை–600009.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–600009.
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளரின் நேர்முக
உதவியாளர், சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.